**சுருக்கம்**

மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மானியக் கோரிக்கை – மாண்புமிகு முதலமைச்சரின் அறிவிப்பு – அறிவிப்பு எண்.16 – வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் மூலம் வீட்டுமனைப் பட்டா வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத் துறை,**
**நில முடிவு அலகு, [நி.மு.1(2)] துறை**

**அரசாணை (நிலை) எண்.541** **நாள்: 11.11.2022.**
**சுபகிருது வருடம், ஐப்பசி 25,**
**திருவள்ளுவர் ஆண்டு 2053,**

**படிக்கவும்:**

1. அரசாணை (நிலை) எண்.931, வருவாய்த் துறை, நாள் 20.05.1983.
2. அரசாணை (நிலை) எண்.891, வருவாய்த் துறை, நாள் 12.06.1989.
3. அரசாணை (நிலை) எண்.275, வருவாய்த் துறை, நாள் 2.4.1994.
4. அரசாணை (நிலை) எண்.867, வருவாய்த் துறை, நாள் 2.9.1996.
5. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு எண்.16, நாள் 21.04.2022.
6. நில நிர்வாக ஆணையரின் கடித எண்.எப்3/ 1861784/2021, நாள் 09.06.2022.

-------

**ஆணை:**

மேலே ஐந்தாவதாக படிக்கப்பட்ட அறிவிப்பு எண் 16–இல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் "அரசு மாற்றுத் திறனாளிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், அவர்களின் சமூக பாதுகாப்பிற்கும், தேவையான பல மறுவாழ்வு திட்டங்களை, பல்வேறு துறைகளுடன் இணைந்து வழங்கி வருகிறது. வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள மாற்றுத் திறனாளிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் வீடுகள் அமைத்து தருவதற்கு ஏதுவாக, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை மூலம் வீட்டுமனைப் பட்டா வழங்கப்படும்" எனத் தெரிவித்துள்ளார்.

2. மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், நில ஒப்படை வழங்குவது குறித்து வெளியிடப்பட்ட முன்னுரிமைப் பட்டியலானது 11.10.1981 முதல் நான்கு ஆண்டுகள் வரை நடைமுறையில் இருக்கும் என ஆணையிடப்பட்டது.

//த.பி.பா//

3. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், மேற்படி 1983–இல் வெளியிடப்பட்ட முன்னுரிமைப் பட்டியல் வரிசையில் முன்னாள் இந்திய திபெத்திய எல்லைக் காவலர்கள் மற்றும் அவர்தம் விதவைகள், ஆகியோர்களை முன்னுரிமைப் பட்டியலில் சேர்ந்து ஆணையிடப்பட்டது.

4. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், மேற்படி 1983–இல் வெளியிடப்பட்ட நில ஒப்படை வழங்குவது குறித்த முன்னுரிமைப் பட்டியலில் பர்மா மற்றும் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய அகதிகள், தங்க கட்டுப்பாட்டு சட்டத்தால் பாதிக்கப்பட்ட பொற்கொல்லர்கள் மற்றும் கள் இறக்கும் தொழிலில் ஈடுப்பட்டோர் ஆகியோர்களை முன்னுரிமைப் பட்டியலிருந்து நீக்கம் செய்தும், எல்லைக் காவற்படை மற்றும் கடற்காவற்படை (Coast guard) ஆகியோர்களை சேர்த்தும் கீழ்க்கண்டவாறு திருத்திய முன்னுரிமைப் பட்டியல் வெளியிடப்பட்டது.

I. எல்லைப் பாதுகாப்புப் படை, டெரிடோரியல் ஆர்மி மற்றும் இந்தோ திபெத் எல்லைப் பாதுகாப்புப் படை உட்பட்டு முப்படை பணியில் இருந்தபோது போரில் உயிரிழந்தவர்கள் மற்றும் செயலிழந்தவர்களின் குடும்பத்தினர்.

II. தாழ்த்தப்பட்ட வகுப்பு மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்த நிலமற்ற ஏழைகள்.

III. 1976–ஆம் ஆண்டு கொத்தடிமை (ஒழிப்பு) சட்டத்தின்படி விடுவிக்கப்பட்ட கொத்தடிமைத் தொழிலாளர்கள் (வருமான வரையறையில்).

IV. முன்னாள் முப்படை வீரர்கள் (முன்னாள் எல்லை பாதுகாப்புப்படை மற்றும் முன்னாள் அசாம் துப்பாக்கிப் படையில் பணிபுரிந்தவர்கள், கடலோரப் பாதுகாப்பு படையினர்(Coast Guard) போன்றவர்கள் உட்பட).

V. முப்படை மற்றும் எல்லைப் பாதுகாப்புப் படையில் பணிபுரியும் வீரர்கள்.

VI. பிற நிலமற்ற ஏழைகள்.

5. மேலே நான்காவதாக படிக்கப்பட்ட அரசாணையில், மேற்படி நடைமுறையில் உள்ள முன்னுரிமைப் பட்டியலில் ஆதரவற்ற பெண்கள் மற்றும் கைம்பெண்களை இம்முன்னுரிமைப் பட்டியலில் சேர்த்துக் கொள்ளலாம் என கொள்கையளவில் அரசால் முடிவு செய்து ஆணை வெளியிடப்பட்டது.

6. மேலே ஆறாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், நில நிருவாக ஆணையர் தனது அறிக்கையில், அரசு புறம்போக்கு நிலங்களை ஒதுக்கீடு செய்வது தொடர்பான திருத்தப்பட்ட முன்னுரிமைப் பட்டியலானது அரசாணை (நிலை) எண்.867, வருவாய்த் துறை, நாள் 02.09.1996–இல் வெளியிடப்பட்டது என்றும், மேற்படி அரசாணையில் ஆதரவற்ற

பெண்கள் மற்றும் கைம்பெண்களை இம்முன்னுரிமைப் பட்டியலில் சேர்த்துக் கொள்ளலாம் என கொள்கையளவில் அரசால் முடிவு செய்து கீழ்க்கண்டவாறு ஆணையிடப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

I. எல்லை பாதுகாப்புப் படை, டெரிடோரியல் ஆர்மி மற்றும் இந்திய திபெத் எல்லைப் பாதுகாப்புப் படை உட்பட்டு முப்படை பணியில் இருந்தபோது போரில் உயிரிழந்தவர்கள் மற்றும் செயல் இழந்தவர்களின் குடும்பத்தினர்.

II. தாழ்த்தப்பட்ட வகுப்பு மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்த நிலமற்ற ஏழைகள்.

III. 1976–ஆம் ஆண்டு கொத்தடிமை (ஒழிப்பு) சட்டத்தின்படி விடுவிடுக்கப்பட்ட கொத்தடிமைத் தொழிலாளர்கள் (வருமான வரையறையில்).

IV. முன்னாள் முப்படை வீரர்கள் (முன்னாள் எல்லைப் பாதுகாப்புப்படை மற்றும் முன்னாள் அசாம் துப்பாக்கி படையில் பணிபுரிந்தவர்கள், கடலோரப் பாதுகாப்புப் படையினர் (coast guard) போன்றவர்கள் உட்பட).

V. முப்படை மற்றும் எல்லைப் பாதுகாப்பு படையில் பணிபுரியும் வீரர்கள்.

VI. பிற நிலமற்ற ஏழைகள்.

VII. ஆதரவற்ற பெண்கள் மற்றும் கைம் பெண்கள்.

7. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு, வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் வீடுகள் அமைத்து தருவதற்கு ஏதுவாக, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் மூலம் வீட்டு மனைப் பட்டா வழங்கும் பொருட்டு, நடைமுறையில் உள்ள விதிகளுக்குட்பட்டு நில ஒப்படை செய்ய ஏதுவாக, ஏற்கனவே நடைமுறையிலுள்ள அரசாணை (நிலை) எண்.867, வருவாய்த் துறை, நாள் 2.9.1996–இல் வெளியிடப்பட்ட முன்னுரிமைப் பட்டியலில் மாற்றுத் திறனாளிகளை சேர்த்து, மேற்படி அரசாணையில் மாற்றம் மேற்கொள்ளலாம். மேலும் இந்நேர்வில், வீட்டுமனைப் பட்டா பெற உள்ள பயனாளிகளுக்கு அடிப்படைத் தகுதிகளாக (Basic Eligibility Criterion) நிலமற்றவர்கள் மற்றும் வறுமைக்கோட்டிற்கு கீழேயுள்ளவர்களை நிர்ணயிக்கலாம். அவ்வாறு மேற்படி அடிப்படைத் தகுதிகளை பூர்த்தி செய்யும் பயனாளிகளுக்கு, முன்னுரிமை வழங்கும் பொருட்டு, மேற்படி அரசாணையில் வெளியிடப்பட்ட முன்னுரிமை வரிசைப் பட்டியலில் சில மாற்றங்கள் செய்தும் மாற்றுத் திறனாளிகளை நான்காமிடத்தில் சேர்த்தும் முன்னுரிமை

வரிசைப்பட்டியலை கீழ்க்கண்டவாறு மாற்றி அமைத்து அரசு ஆணையிடுகிறது.

**முன்னுரிமை வரிசைப் பட்டியல்:–**
(Priority criterion)

I. முப்படைகள் (Armed Forces) மற்றும் துணை இராணுவப் படைகளில் (Para Military Forces), பணியில் இருந்தபோது போரில் உயிரிழந்தவர்கள் மற்றும் செயலிழந்தவர்களின் குடும்பத்தினர்.

II. 1976–ஆம் ஆண்டு கொத்தடிமை (ஒழிப்பு) சட்டத்தின்படி விடுவிக்கப்பட்ட கொத்தடிமைத் தொழிலாளர்கள் (வருமான வரையறையில்)

III. தாழ்த்தப்பட்ட வகுப்பு மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்த நிலமற்ற ஏழைகள்.

IV. மாற்றுத்திறனாளிகள்.

V. ஆதரவற்ற பெண்கள் மற்றும் கைம்பெண்கள்.

VI. முன்னாள் இராணுவப் படைகள் (Ex–Armed Forces) மற்றும் துணை இராணுவப் படைகளில் (Ex–Para Military Forces) பணிபுரிந்தவர்கள் உட்பட.

VII. இதர அடிப்படைத் தகுதிகளை பெற்றுள்ள பயனாளிகள்.

8. மேலே பத்தி 7–இல் உள்ள ஆணைக்கேற்ப தொடர் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு நில நிருவாக ஆணையர் மற்றும் அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

// ஆளுநரின் ஆணைப்படி //

குமார் ஜயந்த்,
அரசு முதன்மைச் செயலாளர்.

**பெறுநர்**
நில நிருவாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை–5.
நில அளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநர், சென்னை–5.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.

**நகல்**
மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (வருவாய் (ம) பே.மே)
அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
முதன்மைச் செயலாளரின் முதுநிலை முதன்மை தனிச் செயலாளர்,
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, தலைமைச் செயலகம்,
சென்னை–9.
இருப்பு கோப்பு / உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.
11/11/2022